# தமிழ்

# மருத்துவப்பொழில்

திங்கள் வெளியீடு

மலர் 2 } மே 1942 { இதழ் 5

## ம றை வு

### செந்தமிழ் இரத்னகரம், மருத்துவமணி
### வல்லை- சண்முகசுந்தர முதலியார் அவர்கள்

முன்னாள் உதவியாசிரியர் சித்தவகுப்பு, இந்திய மருத்துவ பாடசாலை,
சென்னை.

இப்பெரியார் சென்னையிலே பிறந்து தக்க வயதில் கல்விகற்று தென்மராடா ரெயில்வே சாலையில் உத்தியோகம் செய்து ஓய்வு எடுத்துக்கொண்டவர். இவர் தாய்மொழியாகிய தமிழ் மொழியைச் சித்தாந்த சரபம் கலியாண சுந்தர யதீந்தரரிடம் ஐயந்திரிபற ஓதி யுணர்ந்தார். இவர் வெண்பாப் பாட்டை வெகு நயமாகப் பாடும் ஆற்றல் பெற்றிருந்தார். அதே ஆசிரியரிடத்து மொழியின் முட்டறுத்து வீடுபெறுதல் யாக்கையைப் பெற்றதின் பயனென்பதை யறிந்தவராகையால் சித்தாந்தத்தையும் ஓதியுணர்ந்து பலருக்கு அதைப் போதித்துச் சித்தந் தெளியவைத்தார். இவர் ஊன் உணவை வெறுத்துச் சைவ உணவைப் பெரிதுங் கொண்டவர். இவற்றுடன் நில்லாது தமிழ் மருத்துவமாகிய சித்த மருத்துவத்தைத் தக்க ஆசிரியரிடத்துக் கற்று அதை உலகத்தாருக்கு வழங்கினர். நாடி ஆராய்ச்சியில் வல்லுநர். காலஞ்சென்ற திரு. முத்தையா பிள்ளை அவர்கள் இவருக்கு ஒருசாலை மாணுக்கர். குழந்தை வைத்தியத்தில் கைதேர்ந்தவர் என்று கூறுவது மிகையாகாது.

இவர் சிறுவயதிலேயே சுவரை வைத்துச் சித்திரம் எழுதவேண்டும் என்ற பழமொழியைக் கடைப்பிடித்தவராகையால் தேகப்பயிற்சி நன்ருகச்செய்து திடதேகத்தைப் பெற்று எண்பத்தாறு ஆண்டு பிணியற்ற உடலையே தாங்கினர். இப்பழமொழிக்கு இவர் ஓர் எடுத்துக் காட்டென்றே சொல்லலாம்.

இவர் கற்ற தமிழ்மொழியின் பயனைக் காலஞ்சென்ற தமிழ்ப் பேராசிரியர் க. நமசிவாய முதலியார் உடனிருந்து அவர் வெளியிட்ட நூற்களுக்கு வேண்டிய உதவிபுரிந்தார்.

மருத்துவ சார்பாக இவர் ரயில்வே சாலையில் வேலைபார்க்கும் போது இராயபுரத்திலுள்ள அநேக கிறித்தவ நண்பர்களை அவர்களின் பிணியினின்று விடுதலை செய்தார்.

சென்னை இந்திய மருத்துவ பாடசாலையில், காலஞ்சென்ற வைத்திய இரத்தினம் க. ச. முருகேச முதலியார் உடனிருந்து சித்த வகுப்பு மாணவர்கட்குப் பாடம் போதிப்பதிலும் அதன் சம்பந்தப்பட்ட ஆதுரசாலையில் உதவிபுரிந்து பிள்ளைகட்குப் பிணிகணிப்பு தீர்வு முதலியவற்றையும் போதித்தார்.

பிறகு, சித்தவகுப்பு பாடபுத்தகக் கழகத்தில் தலைமைப் புத்தக எழுத்தாளரா யிருந்து அதற்காவன செய்து ஓய்வு எடுத்துக் கொண்டார். பிறகு சித்த வகுப்பு மாணவர்கட்குத் தேர்வாளராக விருந்து இவ்வாண்டுதான் உடற் றளர்ச்சியினல் அப்பதவியினின்று விலகினர்.

இவர் பரிசுத்தமான உள்ளத்தைக் கொண்டவர். இவருடைய குணத்தை இவரது மாணவி பண்டிதை S. கிருஷ்ணவேணி அம்மையார் இறங்கற்பாவில் பாடின கீழ்க்காணும் இரண்டு செய்யுட்களால் அறியலாம்.

"உள்ளொன்றும் புறமொன்ருய் ஒழுகறியீர் அறவுரையில்
வள்ளலெனப் பல்லோரின் வழக்கறுப்பீர் நெஞ்சமதில்
கள்ளமிலா ருமைபோன்ருர் காணுதலிங் கரிதெத்தையும்
தெள்ளியுரைத் தறிவூட்டும் செம்மைதனைப் செப்பரிதே!

கடுமையுரை பகர்ந்திடினும் கருணையதில் நிறைந்திருக்கும்
கொடுமைசிலர் பிறர்மாட்டுக் கூறுவதில் செவிதரினும்
மடமைநிறை அதைமனதில் வைத்துபகை பாராட்டா
திடமுடைய உம்பண்பை தெளிவுடையோர் உணர்வாரே!"

இப்படிப்பட்ட ஒரு பெரியார் இந்நிலவுலகத்தைவிட்டு மறைந்தது சித்த உலகத்திற்கு ஒரு நஷ்டமென்றே கூறலாம்

அவர் ஆன்மா சாந்தியடையவும்.

ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!

# நவமணி

Dr. R. தியாகராஜன், L. I. M.

(72-ம் பக்கத் தொடர்ச்சி)

## நவமணிகளை நிறுத்தி பூசிக்கவேண்டிய திசைகள

வடக்கு
குபேரதிசை
நீலம்

வடமேற்கு
வாயுதிசை
பவழம்

வடகிழக்கு
ஈசான்யம்
புட்பராகம்

மேற்கு
வருணதிசை
கோமேதகம்

—மாணிக்கம்—

கிழக்கு
இந்திரதிசை
முத்து

தென்மேற்கு
நிருதி
மரகதம்

தென்கிழக்கு
அக்கினி
வைடூரியம்

தெற்கு
எமதிசை
வைரம்

"தலத்தினைச் சுத்தி செய்து தவசினை யிட்டுத் தூய
நலத்துகில் விரித்துத் தெய்வ மாணிக்க நடுவே வைத்துக்
குலத்த முத்தாதி யெட்டுங் குணதிசை முதலெண் டிக்கும்
வலப்பட முறையே பானு மண்டல மாக வைத்து"

"அன்புறு பதும ராக மாதியா மரத னங்கள்
ஒன்பதுங் கதிரோ னாதி யொன்பது கோளு மேற்றி
முன்புறை கமலப் போது முதலொன்பான் மலருஞ் சாத்தி
இன்புற நினைந்து பூசை யியன்முறை வழாது செய்தல்"

என்ற செய்யுட்களினு லறியலாம்.

## நவமணி சாதி விவரம்.

ஒன்பது மணிகளும் நான்கு சாதிகளாகப் பிரிக்கப்பட்டுள்ளன.

அவை :—

1. பிரமசாதி — இதனுள் வைரமும் முத்துமடங்கும்
2. அரச சாதி — ,, மாணிக்கமும் பவளமுமடங்கும்
3. வைசிய சாதி — ,, புட்பராகமும் கோமேதகமும், வயிடூரியமும் அடங்கும்
4. சூத்திரசாதி — ,, நீலமும் மரகதமு மடங்கும்

"முன்னவ ரென்ப கற்றோர் வச்சிர முந்நீர் முத்தம்
மன்னவ ரென்ப துப்பு மாணிக்கம் வணிக ரென்ப
மின்னவிர் புருட ராகம் வயிடூரியம் வெயிற் கோமேதம்
பின்னவ ரென்ப நீல மரகதம் பெற்ற சாதி"

என்றவற்றால் அறியலாம்.

பஞ்சரத்தினம் ;— (1) பத்மராகம், (2) இந்திரநீலம், (3) மரகதம், (4) புஷ்பராகம், (5) வைரம். இவ்வைந்தும் மேம்பட்டவையென்றும், இவைகளே பஞ்சரத்தினமென்றுங் கூறுவர்.

நிற்க, ஒருமுதலிற் (பளிங்கில்) றோன்றி வேறுபட்ட ஐந்து வனப்பினையுடைய ஒளிவிடு மணிகள் ஐந்து. அவை ;— (1) மாணிக்கம், (2) புருடராகம், (3) நீலம், (4) கோமேதகம், (5) வயிடூரியம் என்பனவாம். இதனை சிலப்பதிகாரத்தில்,

"ஒருமைத் தோற்றத்தை வேறு வனப்பி
னிலங்குகதிர்விடூஉ நலங்கெழுமணிகள்"

என்று கூறப்பட்டதாலு மறிக.

ஏகாதச மணிகள் :— நவமணிகளுடன் (1) படிகம், (2) அஞ்சனக்கல் ஆகிய இவ்விரண்டையுங் கூட்டி ஏற்பட்ட மணிகள் பதினொன்றுக்கு ஏகாதச மணிகளென்று பெயர்.

முக்குண மணிகள் :— இப்பதினொரு மணிகளில் பொருந்தியுள்ள குண விசேஷப்படி இவைகள் மூவகைப்படும். அவை (1) சாத்மீககுண மணிகள். (2) ரஜோகுண மணிகள், (3) தமோகுண மணிகள் ஆம்.

சாத்மீக குண மணிகள் :- (1) முத்து, (2) பளிங்கு, (3) பச்சை என்பன.

இராசத குணமுள்ள மணிகள் ;— (1) துகிர், (2) மாணிக்கம், (3) கோமேதகம், (4) புருடராகம், (5) வைடூரியம், (6) வயிரம் என்பன.

தாமத குணமுள்ள மணிகள் :- நீலம் என்பது.

"பார்த்திபர் மதிக்கு முத்தம் பளிங்கன்றிப் பச்சை * தானுஞ்
சாத்திகந் துகிர்மாணிக்கங் கோமேதந். தாமேயன்றி
மாத்திகழ் புருடராகம் வயிடூயம் வயிரந்தாமும்
ஏத்திரா சதமாநீலந் தாமதமென்ப ராய்ந்தோர்" திருவிளையாடல்.

## கோமேதகம்

இம்மணி பசுவின் நிணத்தை யொத்திருத்தலின் இப்பெயர் பெற்றது. (கோ - பசு. மேதகம், (மேதஸ்) - நிணம்) இது குற்றமற்ற ஞாயிற்றின் ஒளியினையுடைய தேன்நிறத்தை யுடையது என்பதனை "தீதறு கதிரொளித் தெண்மட்டுருவவும்" என்று சிலப்பதிகாரத்திலும், "கோமேதகம் ....,...கோமூத்திர வர்ணமா யிருக்கும்" என்று போகர் ஏழாயிரத்திலும் கூறப்பட்டிருத்தலைக் காண்க. மற்றும், இதன் நிறத்தையும் குணத்தையும் திருவிளையாடல் புராணத்தில் "..........வலனிணங்கள் சிதறு மிடைப்படுவன கோமேதக மென்ப" "உறுக்குநறுநெய்த்துளி தேன்துளி நல்லான் புண்ணிய நீரொத்துச்சேர்ந்துசெருக்குபசும்பொன் நிறமும் பெற்று மெலிதாய்த் தூய்தாய்த் திண்ணிதாகி இருக்குமது தரிக்கினிருட் பாவம்போம் பரிசுத்தியெய்தும்" என்றும் கூறப்பட்டுளது.

கோமேதகம், புட்பராகம், வைடூரியம், இம்மூன்றினையும், வாழை மா, பலா இம்மூன்று கனிகளையும் எவ்வாறு முப்பழமெனக் கூறுவரோ அதைப்போன்றே மும்மணியெனக் கூறுவதொரு வழக்குண்டு.

கோமேதகமணிக்குப் பொற்றகட்டில் மூலைப்பால் விட்டொழுக விட்டால் காணும் நிறம் கோமேதகத்துக்குமாகும் என்று வெண்காட்டடிகள் புராணம் கூறும். காந்தியில்லாமல், பளுவில்லாமல், புரைகளுடன் இருக்கும் கோமேதகம் சிறந்ததன்று என்றும் கூறுவர்.

### கோமேதகத்தின் குணம்

"வாதபித்த கோபத்தை மாற்றுமலக் கட்டறுக்கும்
ஓதுமந் தாக்கினியை ஓட்டுங்காண் - மீதில்
அழறுருவி காரம் அகற்றும்ஒளி செய்யும்
கழறுகின்ற கோமேத கம்"

(போ - ள்) கோமேதகம் வாதபித்தத் தன்னிலைவிர்த்தி. மலக்கட்டு, அக்கினிமந்தம், சுரத்தால் பிறந்த துர்க்குணம் இவற்றை நீக்குவதன்றி சரீரத்திற்கு ஒளியைக் கொடுக்கும்.

---

* "பச்சை தாமதமிக்குச் சாத்துவிக ராசதங்கள்
குறைந்ததென்பர் முதநூலார்"

நிற்க, உத்தமக் கோமேதக மணியினை அணியிலமைத்து அணியின் கீழ்க்கண்ட நன்மைகளைப் பயக்கும்,

"களிப்பான உத்தமத்தைத் தரித்தானுனல்
  * கனபுத்தி மிகவுமே கோசரமுமாகும்
விரிப்பான ஆயுள்தான் விருத்தியுண்டாம்
  மிடுக்குண்டா மென்னுளு மெலிவுமில்லை
தளிப்பான சலந்தன்னைச். சாடிப்போடும்
  தசையிலுள்ள தோஷமெல்லாந் தகர்ந்து போமே"

சுத்தி :- (1) கோமேதகத்தைக் குதிரை நீரில் மூன்றுநாள் ஊறவைத்துப் பிறகு நிலக்குமிழ் இலைச்சாற்றில் ஒருநாள் ஊறவைத்து எடுக்கச் சுத்தியாம். (2) கோமேதகம் அல்லது மாணிக்கத்தை அப்பிரகத் தகட்டின்மீது வைத்துச் சாராயம், கவுஸ்பான் தீநீர், பன்னீர், காடி இந்நான்கையும் சமபாகம் சேர்த்து அந்நீரைக்கொண்டு நான்கு சாமம் சுறுக்கிட சுத்தியாம் என்று அனுபோக வைத்திய நவநீதம் கூறுகிறது.

பற்பம் :- சுத்தித்த கோமேதகத்தைக் கருஊமத்தைச் சாற்றில் ஒருநாள் ஊறவைத்து மறுநாள் குகையிலிட்டு மேலோடுகொண்டு மூடிச் சீலைமண்செய்து கொல்லன் உலையில் வைத்து மேலுங்கீழும் கரியிட்டு ஊதவும். இவ்விதம் மும்முறை யூதப் பற்பமாகும். இதனை அரைக்கடுகு முதல் முழுக் கடுகளவுவரைக் கொடுக்கலாம்.

அனுபானம் :- பசுவின் வெண்ணெய், பசுவின்நெய், தேன் ஆகியவைகள் ஆம்.

தீரும் பிணிகள் ;- இதனுல் வாதபித்த தொந்த நோய்கள், சுரத்தில் உண்டாம் அழலை, பாண்டு, சோபை, ஈரல்வலி, குடல்வாதம் நீங்குவதன்றிப் பசியும், உருசியும் உண்டாகும், அதிக கண்ணீர்ப் போக்கை நீக்கும்.

---

* முன் கூறிப்போந்த வியாசத்தில் நவக்கிரகங்களையும் நவமணிகளையும் ஒப்புமைப்படுத்திக் கூறியாங்கு கோமேதகம் இராகுக்கு ஒப்பிடப்பட்டிருத்தலினுண்மை ஞானகாரகனுனமையின் இம் மணியாலாய அணியை ஒருவனணியப் புத்திகூர்மை யுண்டாமென்பது புலனும்.

**பற்பத்தின் சோதனை :-** பற்பத்தை நீரிலிட்டால் மிதக்கவேண்டும்.

குறிப்பு - மூசையிலிட்டு ஊதுவதற்குப்பதில் ஊமத்தைச்சாறு விட்டு நன்றாயரைத்து வில்லைதட்டி சில்லிட்டு சீலைசெய்து அரைப் பலத்திற்கு ஐம்பது எருவில் புடமிட்டெடுக்கவும், இவ்விதம் பற்ப மாகும்வரை செய்யவும்.

உடலுறுப்பிலுண்டாம் பிணிகட்கு நிகழ்கால ஆங்கில மருத்து வத்தில் பல மிருகங்களின் அவ்வவ்வுறுப்பாலாய மருந்து உருவங் களை அல்லது அவ்வுறுப்புகளைத் தீநீர்செய்தோ நோயினனுக் களித்து நோயை நீக்குகின்றனர். இவ்வழக்கு யூனானி மருத்துவத் தில் பல்லாண்டுகட்கு முன்னரே இருந்திருக்கின்றது.

நம் சித்த மருத்துவம் பெரும்பான்மை சூதகந்த தாதுப்பொருட் களைக்கொண்டு செய்யும் மருத்துவமாகையினால் இங்குக் கூறப்பட்ட கோமேதகத்தாலாய பற்பத்தைக்கொண்டு நிணசம்பந்தமான பிணி கட்கும், நிணவன்மைக் குறைவுக்கும் பிரயோகிக்க நற்பயனை யளிக்கு மென்பதை சித்தர்கள் பல்லாயிரம் ஆண்டுகட்கு முன்னரே யுணர்ந் திருந்தனர் என்பது தெற்றெனப் புலனாகும். தாதுப்பொருட்களி லும் (உடலுறுப்புச்சத்து) அச்சத்திருப்பதனால் உயிர்க்கொலை யின்றி யும் அதிக அளவில் நாள்பட நோய் நீங்குவதன்றிச் சிறிய அளவில் விரைவில் நோய்நீங்குவதால் இம்முறை மேன்மையுடையதென்பது சொல்லாமலே விளங்கும்.

---

## தமிழ் மருத்துவப் பொழிலின் வளர்ச்சிக்காக நன்கொடை யளித்த பெரியார்களின் பெயர்கள்.

—:0:—

டாக்டர் வி. டி, ஜகதீஸ்வரன் ரூ. 5-0-0

,, என். வி. எம். பங்காருதாஸ்,

இராமசந்திரபுரம் ரூ. 200-0-0

# தாரை

கோ. துரைராஜன்.

(75 ம் பக்கத் தொடர்ச்சி)

மோர் தாரை :— தாரை திரவங்களுள் மோர் அதிகமாக உபயோகப்படுகிறது. பிரம்மண (தேகவன்மைக்காக) சிகிச்சை செய்யவேண்டிய நாட்பட்ட நோய்களுக்கு இதனைக் கையாளலாம். இதைத் தனியாக உபயோகிப்பதரிது. பெரும்பாலும் குடிநீர்களைச் சேர்த்து நன்ருய்க் கலந்துதான் இதை உபயோகிக்கின்றனர். தாரை திரவத்திற்கு வேண்டிய மோரை அதிசாக்கிரதையாய்த் தயாரிக்க வேண்டும்.

மோர் செய்வதற்குப் பசுப்பால்தான் நன்று. அப்பாலைக் கொதிக்க வைக்க அதிக பழமையும் புதுமையுமில்லாத ஒரு மட்பாண்டம் வேண்டும். ஒரு குடுவம் (16 தோலா) பாலுக்கு நான்கு குடுவம் வீதம் நீர்விட்டு அதில் இரண்டு தோலா சரக்குகளை ஒன்றிரண்டாக இடித்து, சுத்த வெண்சிலையில் முடிந்து இட்டுக் காய்ச்சவேண்டும். இங்ஙனம் சேர்க்கப்படும் சரக்குகளில் கோரைக்கிழங்கு, வெட்டிவேர், அதிமதுரம், சந்தனம், ஜீவனேயகண சரக்குகளே முக்கியமாம். இச் சரக்குகளில் ஒன்ருே, இரண்டோ, பலவோ தோடங்களுக்கும் நோய்களுக்கும் தக்கவாறு உபயோகிக்கப்படும். அவற்றைச் சமனுகக்கூட்டி ஒரு குடுவம் பாலுக்கு இரண்டு தோலாவீதம் சேர்க்க வேண்டும். காய்ச்சும்போது பாலை அகப்பையால் துழாவிக்கொண்டேயிருக்க வேண்டும்; ஏடுகட்டக்கூடாது. நீர் எல்லாம் வற்றிச்சுண்டிய பிறகு அதாவது எவ்வளவு பால் விடப்பட்டதோ அவ்வளவுக்குச் சுண்டிய பிறகு இறக்கி ஆறவைக்க வேண்டும். அப்பொழுதும் ஏடுகட்டவிடாது துழாவிக்கொண்டேயிருக்கவேண்டும். குளிர்ந்த பிறகு கிழியை ( சரக்குகளை முடித்திட்ட மூட்டையை) எடுத்துப்பிழிந்து கொண்டு போட்டுவிடவும். நீர் விடாத நல்ல புளித்த மோரை அப் பாலில் புரைகுத்தி மூடி குளிர்ந்த இடத்தில் வைக்கவேண்டும். மறுநாள் தயிரை நீர்விடாது மத்தினல் சிலுப்பி வெண்ணெயை நீக்கிவிட வேண்டும். இப்படிவந்த இந்த இயற்கை மோரில் சிறிதை அன்று தோய்ப்பதற்காகப் புரைக்குத் தனியே எடுத்து வைத்துக்கொண்டு மற்றதைத் தாரைக்கு உபயோகிக்கவும். இந்தமோருடன், நோய்க்குத் தக்கவாறு நெல்லி, சிற்ருமுட்டி, வெட்டிவேர், மதுரம், பஞ்சமூலம், தசமூலம், ஜீவந்தியாதிகணம், ஜீவனேயகணம், பஞ்சபஞ்சமூலம், வேறு தேகவன்மைக்காகிய (பிரம்மண சிகிச்சைக்காகிய) சரக்குகளில் ஒன்றின் குடிநீரைத் தக்க அளவில் சேர்க்கலாம்.

மேற்சொல்லியவைகளில் சாதாரணமாக உபயோகப்படுவது நெல்லிக்கியாழம். இதைச் சமனளவுதான் சேர்க்கவேண்டும். நெல்லிக்குடிநீர் சேர்ந்த மோரைத் 'தாரையாக உபயோகிக்க நரைமயிர் கறுக்கும். பலஹீனம், தலைவலி, நரம்புத்தளர்ச்சி, கீல்நோய்கள், பிரமேகம் முதலிய மேகவியாதிகள், தமரக (Heart) நோய்கள், அஜீரணம், கண், செவி, மூக்கு இவைகளின்நோய்கள் தீரும். இளைத்தவர்களுக்கும் இது நன்று.

பால் தாரை :— கறந்த பசுப்பாலின் சூடு ஆறுவதற்கு முன்பே தாரையாகவோ அல்லது சரக்குகளிட்டுக் காய்ச்சி யாறின பாலைத் தாரையாகவோ உயயோகிக்கலாம். மோர் செய்வதற்குப் பாலை எப்படி காய்ச்சவேண்டுமென்று கூறினோமோ அங்ஙனமே இப்பாலையும் காய்ச்சவேண்டும். சாதாரணமாகச் சந்தனம், வெட்டிவேர், பஞ்சகந்தபொருள்கள் இவைகளில் சிலவற்றைதான் உபயோகப்படுகின்றன சில சமயங்களில் மதுரம், கோரைக்கிழங்கு, உளுந்து, பச்சைப்பயறு போன்றவைகளும் உபயோகப்படுகின்றன. பால் எட்டுபங்கு, நீர் முப்பத்திரண்டு பங்கு அல்லது நாற்பத்தெட்டு பங்கு, சரக்குகள் ஒரு பங்காகச் சேர்த்து ஏடுகட்டவிடாது காய்ச்சிப் பாலளவுக்குச் சுண்ட வைத்துக் குளிர்ந்தபிறகு உபயோகிக்க வேண்டும். பாலைக் காயச்சாது உபயோகிக்கும்போது பச்சைக்கர்ப்பூரம், கோரோசனை, சுக்கு, மூசாம்பரம், வெட்டிவேர், மர்மகுடிகா இவைகளில் சிலவற்றைச் சேர்க்கலாம். இவைகளைச் சேர்த்து முன்கூறியவாறு காய்ச்சியும் கையாளலாம். குறைந்தது இரண்டுபடி (பிரஸ்தம்) பாலைத் தாரையாக உபயோகிக்க வேண்டும். தோஷத்திற்கும் நோய்க்கும் தக்கவாறு பசு அல்லது எருமைப்பாலை உயோகிக்கலாம். தூக்கமின்மைக்கு எருமைப்பாலே நன்று.

தாய்ப்பால் தாரை :— தனி தாய்ப்பாலில் பச்சைக்கர்ப்பூரம், கோரோசனை, குங்குமப்பூ சேர்த்துத் தாரைக்கு உபயோகப்படுத்துகின்றனர். இவைகளைச் சேர்க்காமலும் உபயோகிக்கலாம். தாரைக்கு இரண்டுபடி தாய்ப்பால் அகப்படுவது கடினமாகையால் அத்தனை அவ்வளவாக உபயோகிப்பதில்லை. இதற்குப் பதிலாகப் பசுப்பாலையே சிலர் உபயோகிக்கின்றனர். அதிசிறு (ஒரு மாதத்திற்குட்பட்ட) குழந்தையையோ அதிபெரு (ஒரு வருடத்திற்கு மேற்பட்ட) குழந்தையையோ வுடையவளாயிராது நடுத்தரமான குழந்தையை யுடையவளாய், நோயின்றி ஆரோக்கியமாயும், இளம் வயதாயும், பட்டினி

யில்லாதவளாயுமுள்ள தாயினுடைய பாலையே உபயோகிக்கவேண்டும். பாலைப் பீச்சுவதற்குமுன்பு மார்புகளின் காம்புகளைக் கழுவவேண்டும். சுத்தமான பாத்திரத்தில் பீச்சவேண்டும். அரைச்சாமத்திற்கு மேல் வைத்திருந்தால் இதன் குணம் கெடும். ஆகையால் அதற்கு முன்பே உபயோகப்படுத்தவேண்டும்.

குறிப்பு :— சந்நிபாதம், அதிகசுரம் முதலியவைகளுக்குச் சீலையில் நனைத்து (பீச்சு) நெற்றியில் போடுவதுண்டு.

சிநேக (நெய்) தாரை :— மலையாள தேசத்தில் மோர் தாரைகளையே அதிகமாகக் கையாளுகின்றனராயினும் நெய் (சிநேக) தாரைகளும் முக்கியமானவையே. வித்துநெய் (தைலங்கள்), நெய், கொழுப்பு, மூளை, (மஜ்ஜை) இந்நான்குவிதமான நெய்களில் ஒன்று, இரண்டு, மூன்று அல்லது நான்கையுமோ நோய், தோடம் இவைகளுக்குத்தக்கவாறு கலந்து உபயோகிப்பதுண்டு. இவைகளில் இரண்டைக் கலப்பதுதான் யமக சிநேகமாகும் சரக்குகளிடாமலோ, யிட்டுக்காய்ச்சியோ, அல்லது சூரணங்கள் கலந்தோ உபயோகிக்கலாம். எப்படி உபயோகிப்பினும் ஒரு படிக்குக் குறைந்து உபயோகிக்கக்கூடாது. உபயோகிக்கும்போது இவை இளஞ்சூடாகவே யிருக்கவேண்டும். ஆறிவிட்டால் மறுபடியும் சுடவைத்துத்தான் உபயோகிக்கவேண்டும். சுடவைக்கும்போது நீர் யந்திரத்தில்தான் சுடவைக்கவேண்டும். இவைகளைக் காய்ச்சிய சில தினங்களுக் குள்ளாகவே உபயோகிக்கவேண்டும். சுத்தமாய் உலர்ந்த பாத்திரங்களில் இவைகளை யூற்றி ஓதமில்லா இடங்களில் வைப்பது அவசியமாகும்.

வேறு தாரைகள் :— இளநீர், குடிநீர், புளித்த காடி (Dhanyamlam) குளிர்ந்த நீர் இவைகளைத் தாரையாக மேற்சொல்லியவாறு உபயோகிக்கலாம். குளிர்ந்த நீருக்குமட்டும் அளவில்லை. நூறுமுதல் ஆயிரம் குடம்வரை குடம் குடமாக நீரைத் தலையில் ஊற்றவேண்டும். இச்சிகிச்சை சாதாரணமாக உன்மத்தர்களுக்கு உபயோகப்படும்.

(தொடரும்)

# நோய்ப் பெயர் வரலாறு

Dr. N. சுப்பிரமணியம்: L. I. M.
(Member, Central Board of Indian Medicine)

### வாழ்த்து

திருவாய்மொழி

இந்திரற்கும் பிரமற்கும் முதல்வன் றன்னை
இருநிலங்கால் தீநீர்விண் பூதமைந்தாய்
செந்திறத்த தமிழோசை வடசொல்லாகித்
திசை நான்குமாய்த் திங்கள் ஞாயிறாகி
அந்தரத்தில் தேவர்க்கு மறியலாகா
வந்தணனை யந்தணர் மாட்டந்தி வைத்த
மந்திரத்தை மந்திரத்தால் மறவாதென்றும்
வாழ்த்துதியேல் வாழலா மடநெஞ்சமே.

### குருவணக்கம்

சித்தமருந்தின் சீர் சித்தித்த சிந்தையவர்
எத்தவரும் மாணவர்கள் இயற்றினு மின்மொழியாலே
சித்தங் கவரும் திருவுருவ முருகேசர்
அத்தரவர் அன்புள்ளார் அகத்திருந்து அருளுகின்றார்

எல்லாத் திறங்களையும் எண்ணியவர் ஈந்தளித்தார்
பொல்லார்கள்பொக்கெனவே பொதிந்த பொருள் பொருளு
நல்லார் அவருரைத்த நன்மொழியைநாளுந்தேர்ந் ரைத்தார்
தெல்லாரும் இன்புறவே இயக்குமிவ் வுலகினையே.

நோய்ப் பெயர் வரலாறு என்ற சொற்றொடர் நோய், பெயர், வரலாறு என மூன்று சொற்கள் சேர்ந்தது. இம்மூன்று சொற்களையும் தனித்தனி விளக்கி, நோய்வரலாறு, பெயர் வரலாறு, நோய்ப்பெயர் எனப் பகுத்துக்கொண்டு தலைப்பை விளங்கவைத்து நோய்ப் பெயர் களை ஒவ்வொன்றாகக் குறித்து அவைகளின் விவரங்களை விளக்குவது என் நோக்கம். ஆகவே இக்கட்டுரையை நோய்களைப்பற்றி எழுதுவ தற்கு ஓர் முன்னுரை எனக் கொள்ளலாம்.

நோய் என்ற சொல் 'நோ' என்ற பகுதியடியாகப் பிறந்து வலித் தல் வருத்துதல் என்ற பொருளைக் காட்டுகிறது. நோயைப் பெற்றி ருத்தலின் நோய் காரணப்பெயராயிற்று. 'நோய்க்கிடங் கொடேல்' என்பது ஔவையார் திருவாக்கு. இடங்கொடுத்தாலன்றி நோயணு காது என்பது துணிபு.

பெயர் உண்மையளவை மாத்திரம் உணர்த்திப் பிழம்பு (வடிவு) உணர்த்தப்படாதனவும், உண்மையும் பிழம்பும் உணர்த்தப்படுவனவும் எனப் பொருட்கள் இருவகைய. இருவகைப் பொருட்களேயும் அவற்றின் பெயர்கொண்டுதான் நாம் உணருகிறோம்.

நோயினுல் எற்படும் இயற்கைக் குறிகுணங்களேச் சுட்டிக்காட்டி அனுமான அளவையால் நோயைக் கணித்து அதற்குத் தக்கதோர் பெயர் இடுகிறோம்.

அன்பு, அருள், அறிவு முதலிய குணங்களின் தன்மைகள் பெயர்கொண்டு உண்மை மாத்திரையான் உணர்த்தப்படுமல்லாது பிழம்பான் உணர்த்தப் படாதனவாம். வலி, குத்தல், எரிவு முதலிய நோய்க் குணங்களும் அவ்விதமே, நீரேற்றம், பெருவயிறு முதலிய நோய்ப் பெயர்களேக் குறி குணஙகளாலும் உணரலாம்.

வரலாறு :— வரும்மொழி. நிகழ்ச்சி முறை, விவரம் எனப் பொருள்படும்.

## நோய் வரலாறு

ஐம்பூதங்கள் தங்கள் இயற்கைத் தன்மை மாருது உடற்ருெகுதியாகவும் உடற்பகுதியாகவும் நிலேமாறி யமைந்து, (பரிணமித்தல்) இருபாற் சேர்க்கை யாலான உடலில் இயல்பாய் உயிர் ஒன்ற, இவ்விதவுடலமாகிய விளே நிலத்தில், நிலம், காலம், தொழில், உணவு, நடை, மன எழுச்சி, நிகழ்ச்சி இவை துணேகொண்டு, கருப்பம், பழவினே, வினேப்பயன் என்ற காரணங்களான வித்துக்கள் முளேப்பதாகி, உடலின் இயற்கைத் தன்மைகளாகிய ஆக்கல், காத்தல், அழித்தல் என்ற மூன்று தன்மைகளும் நிலே மாறும்படி செய்து அம்மாற்றங்களே குறி குணங்களால் காட்டி நிற்பது நோய்.

## ஐம்பூதத்தியற்கைத் தன்மை

நிலம், நீர், நெருப்பு,வளி, வானம் எனப் பூதங்கள் ஐந்து.

மண்டிணிந்த நிலனும்
நில னேந்திய விசும்பும்
விசும்பு தைவரு வளியும்
வளித்தலே இய தீயுந்
தீமுரணிய நீரும், என்றுங்
கைம்பெரும் பூதத் தியற்கை — புறம்.

(தொடரும்)